# 2025-2026

# SCHOOL ACADEMIC
# MASTER PLAN
# ALPS-DEVIKULAM

# 2025-2026

# SCHOOL ACADEMIC MASTER PLAN

# ALPS-DEVIKULAM

முன்னுரை:-

2025-26 கல்வியாண்டிற்கான ALPS. தேவிகுளம் பள்ளியின் சிறந்த முன்னேற்றத்தை இலக்காகக் கொண்ட School Master plan எங்களது பள்ளியின் SRG கூட PTA/MPTA/Ward member அனைவருடைய பங்களிப்பில் தயாரிக்கப்பட்டது. இக்கல்வியாண்டில் எங்கள் பள்ளி மாணவர்களை எழுத்து மற்றும் வாசிப்பில் நன்கு தெரியவர்களாக்க வேண்டிய முயற்சிகளை அனைத்து வகுப்பு ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒருங்கிணைந்து செயல்படுத்தி பள்ளியை சிறந்த பள்ளியாக்க தீர்மானிக்கப் -பட்டுள்ளது.

நோக்கங்கள்:-

குழந்தைகளின் சிறந்த கற்றலுக்கு ஏற்ற கவர்ச்சிகரமான முறையில் பள்ளியை மாற்றத் தேவையான சமூக ஆதரவு கிடைக்க

வேண்டிய செயல்களில் ஈடுபட்டு PTA/MPTA/ Wardmember/OSA/SSG போன்றோரின் பங்களிப்பு பள்ளியின் வளர்ச்சிகரமான ஒரு சூழலை மேம்படுத்துதல்.

*. மாணவர்களின் சிறந்த படைப்புகளையும், செயல்பாடுகளையும் பொதுமக்களிடையே கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எடுத்தல்.

*. தினவிழாக்கள் மற்றும் முக்கிய தினங்களில் மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டக் கூடிய சூழல்களை உருவாக்குதல்.

*. மாணவர்களின் தினசரி கற்றல் செயல்பாடுகளை பெற்றோர்களுக்கு whatsapp group மூலம் தெரியப்படுத்துதல்.

*. எழுத்து மற்றும் வாசிப்பில் மாணவர்களுக்கு உள்ள முன்னேற்றங்களை பெற்றோரிடம் தொடர்பு கொண்டு பெற்றோர்கள் மாணவர்களை வீட்டில் கவனிக்கின்றார்களா? என உறுதி -படுத்திக் கொள்ளுதல்.

இதற்காக மாணவர்களின் எழுத்து மற்றும் வாசிப்பில் கீழ்காணும் உத்திகளைப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறந்த படைப்புகளை வெளியிட்டு பாராட்டுதல்.

*. ICT பயன்படுத்தி எழுத்துக்களின் சிறப்புகளை அறிந்து கொள்ளச் செய்தல்.

*. சிறந்த எழுத்தாளர்களின் படைப்புகளை எடுத்துக்காட்டாக ICT - மூலம் அறிமுகம் செய்தல்.

<u>வாசிப்பு</u>

*. நேர்மறையான வாசிப்பு சூழலை (positive reading) உருவாக்குதல். வாசிப்பு மூலை பயன்படுத்துதல். கவர்ச்சிகரமான வாசிப்பு மூலை அனைத்து வாசிப்புகளிலும் ஏற்படுத்துதல்.

*. கவர்ச்சிகரமான வாசிப்பு அட்டைகள் படங்களோடு கூடிய எளிய கதை மற்றும் கவிதை வரிகளடங்கிய புத்தகங்கள் சேகரித்து கொடுத்தல்.

*. வாசிப்பு ஒலிநாடாக்களைப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துதல்.

*. ஆசிரியர் / மாணவர்களின் சிறப்பு வாசிப்பு பகுதியினை மாதிரியாக்கி அவ்வப்போது வழங்குதல்.

*. பாடம் தொடர்பான வகுப்பு வாரியாக உள்ள நூலக புத்தகங்களைப் பயன்படுத்துதல்.

☆. பெற்றோர்களின் கவனம் குழந்தைகளுக்கு வாசிப்புத் திறனில் கிடைப்பதற்கு செய்தித்தாள்களை சேகரித்து வாசிப்புத் திறனில் ஈடுபடுத்துமாறு ஆலோசனை வழங்குதல்.

☆. கற்பித்தல் செயல்பாடுகளில் பின்தங்கிய குழந்தைகளுக்கும் எளிதில் வாசிக்கக் கூடிய எழுத்து அட்டைகள், வார்த்தை அட்டைகள், வாக்கிய அட்டைகள் உருவாக்கி பயன்படுத்துதல்.

☆. வாசிப்பு பயிற்சிக்கு தேவையான குறிப்புகள் தயாராக்கி கொடுத்தல், பள்ளியில் தினசரி செய்தி வாசிப்பு, கதைவாசிப்பு, கவிதை வாசிப்பு, விடுகதைகள் வாசிப்பு போன்ற அன்றாட செயல்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்துதல் போன்றவை வாசிப்பு திறனை மேம்படுத்த தீர்மானிக்கப் -பட்டுள்ளது.

எழுத்து :-

☆. மாணவர்களின் எழுத்து திறனை மேம்படுத்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து செயல்படவும், கவனம் செலுத்தவும் பெற்றோர். ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது

✯. கவர்ச்சிகரமான எழுத்தட்டைகள் பயன் படுத்துதல்.

✯. கூடுதல் எழுத்து பயிற்சிக்கான எளிய செயல்பாடுகள் / பயிற்சிதாள்கள் கொடுத்தல்.

✯. மாணவர்கள் தினசரி நாட்குறிப்பேடு எழுதுவதற்கு உற்சாகப்படுத்துதல்.

✯. சிறு கவிதைகள், கதைகள், வார்த்தை விளையாட்டு குறிப்புகள், சிறு குறிப்புகள் எழுதுவதற்கு தேவை -யான சூழல்களை உருவாக்கிக் கொடுத்தல்.

✯. பிழையின்றி எழுதுவதற்கு தேவையான விளக்கங்களை பலவிதமான சான்றுகளுடன் எடுத்துக் கூறி விளக்குதல்.

✯. பாடத்தில் வருகின்ற செயல்பாடுகளில் மாணவர்களை சுயமாக எழுதி விடை காண்பதில் உற்சாகப்படுத்துதல்.

✯. மாதிரி எழுத்து செயல்பாடுகளை அறிமுகம் செய்தல்.

✯. கூடுதல் கற்பித்தல் துணைக்கருவிகள் பயன்படுத்துதல்.

✯. மாணவர்களின் படைப்புகளை தொகுப்பாக்கி வெளியிட்டு சிறப்பித்தல். பெற்றோர் கூட்டங்களில்

* வாசிப்புப் போட்டி நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்துதல்.

* ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களை எழுத்துக்களை இணைத்து புதிய வார்த்தைகளை கண்டுபிடித்து வாசித்துக் கூற வாய்ப்பளித்தல்.

* ICT பயன்படுத்தி வாசிப்பின் குரல் ஏற்றத்தாழ்வு கதையுணர்வு, இரசனையுணர்வு, உணர்வுகளில் பல்வேறு பரிமாணங்களின் சிறந்த படைப்புகளை வெளியிட்டு பாராட்டுதல்.

முடிவுரை:-

2025-2026 ஆம் கல்வியாண்டின் இலக்காக எமது பள்ளி மாணவர்களின் எழுத்து மற்றும், வாசிப்பில் நாங்கள் தீர்மானித்துள்ள இந்த இலட்சியத்தை அடைவதில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு ஆண்டு இறுதியில் பொதுமக்களின் முன்னிலையில் குழந்தைகளின் திறமைகளை வெளிக்காட்டுவோம் என்றும் பள்ளியின் வளர்ச்சியில் சமூகத்தையும் இணைத்து செயல்படுவோம்.

நன்றி.